TC-027

074/DD/22

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

**DEPARTMENTAL EXAMINATIONS**

**SPECIAL LANGUAGE TEST FOR OFFICERS OF THE EDUCATION DEPARTMENT HIGHER STANDARD – FIRST PAPER – TAMIL (TEXT AND TEXTUAL GRAMMAR)**

(Without Books)

Maximum Time : 2.30 hours                                                      Maximum Marks : 100

பகுதி – I

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** **(6 × 4 = 24)**

1. வசன கவிதை – குறிப்பு வரைக.

2. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

3. தீவக அணியின் வகைகள் யாவை?

4. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

5. நான்கினுக்கு இலக்கணக் குறிப்பு தருக :

(அ) வளர்வானம்

(ஆ) வழங்கல்

(இ) மூதூர்

(ஈ) காடனுக்கும், கபிலனுக்கும்.

[Turn over

6. நான்கினுக்கு வாக்கியுத்தில் அமைத்து எழுதுக :

(அ) கண்ணினைக் காக்கும் இமை போல

(ஆ) அள்ளி இறைத்தல்

(இ) சிலைமேல் எழுத்து போல

(ஈ) கண்ணும் கருத்தும்

7. நான்கினுக்குப் பொருள் தருக :

(அ) தார்

(ஆ) கான்

(இ) கோடு

(ஈ) விசும்பு

8. நான்கினைப் பிரித்து எழுதுக.

(அ) கண்ணோட்டம்

(ஆ) பாடாண்திணை

(இ) கல்வியென்று

(ஈ) புதியதோர்

## பகுதி – II

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** **(6 × 6 = 36)**

1. சிறு தாம்பு ......... எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை அடிமாறாமல் எழுதுக.

2. “தலைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

3. மூவகை மொழி குறித்து எழுதுக.

4. ஜெயகாந்தன் – குறிப்பு வரைக.

5. வைத்தியநாதபுரி முருகன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

6. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

7. ஐவகை நிலங்களுக்குரிய திணையும் பொழுதும் – யாவை?

## பகுதி – III

கீழ்கண்ட வினாக்களில் எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

(4 × 10 = 40)

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
2. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை விவரித்து எழுதுக.
3. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.
4. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.
5. மா.பொ.சிவஞானம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை 'சிற்றகல் ஒளி' என்னும் பாடப்பகுதியின் வாயிலாக விவரிக்க.